மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 60/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : தியாகராஜன் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

30.10.2025

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை –</u>

1. சவுதி அரேபியாவில் எனக்கு ஓட்டுநர் உரிமம் **வாசாஆ12** எந்த வருடம் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ12 ஆவணத்தை வைத்து 1990லிருந்து 2021ம் வருடம் வரை நான் சவுதி அரேபியாவில் இருந்தேன் என்று முடிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. **பிவாசாஆ11** பாஸ்போர்ட் ஆவணத்தில் எந்தவிதமான குறிப்புகளும் குறிப்பிடப்படவில்லை என்றால் பாஸ்போர்டை ஒப்படைக்கச் சொன்னதால் ஒப்படைத்தேன். பிவாசாஆ11 பாஸ்போர்ட் உடன் இணைந்துள்ள தாளில் துறையின் முத்திரை எதுவும் இல்லாததால் அது என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. **பிவாசாஆ9** என்பது ரத்து செய்யப்பட்ட பாஸ்போர்ட் என்றால் சரிதான், ஒன்று முடிந்தவுடன் மீண்டும் புதுப்பிப்பதற்காக ரத்து செய்யப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட்டின் மூலம் எந்த வருடம் சென்று எந்த வருடம் வந்தேன் என்றால் 1990ம் வருடம் ஜனவரியில் சென்றேன். பிவாசாஆ9 சென்னை விமான நிலையத்தில் இருந்து 2001ம் வருடம் கிளம்பியதாக குறிப்பு உள்ளது என்றால் 2001ம் வருடம் சவுதி அரேபியாவில் இருந்து வந்தேன். 2005ம் வருடம் சவுதி அரேபியாவில் இருந்து வந்தேனா என்றால் பாஸ்போர்டில் உள்ளது எனக்கு சொல்ல தெரியவில்லை.

2. பிவாசாஆ8, பிவாசாஆ9, பிவாசாஆ10, பிவாசாஆ11 பாஸ்போர்ட் ஆவணங்களில் மூலமாக சவுதி அரேபியாவில் டிரைவராக வேலை பார்த்தேன் என்று நிரூபிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான்தாக்கல் செய்துள்ள பிவாசாஆ8 முதல் பிவாசாஆ12 ஆவணங்கள்

மூலமாக சவுதி அரேபியாவில் இருந்து வேலை பார்த்து தாவா சொத்தை வாங்கினேன் என்பதும்  அந்த ஆவணங்களுக்கும் அந்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, நான் வேலை பார்த்துதான் சொத்தினை வாங்கினேன். சவுதி அரேபியாவில் எந்த நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்று அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சவுதி அரேபியாவில் எந்த வேலை பார்க்கவில்லை என்றாலும் அதன் மூலம் தாவா சொத்தை வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.